# கடற்கரை கவியரங்கு எண் – 631

நாள் 05-11-2023



## இதுவும் நட்பே!

நண்பர் என்று யாரையுமே இங்கு;
நலமாய்க் காண வழியில்லை!
ஓரிரு நண்பர் உண்டவரும்,
உயர்ந்த மனத்தில் நிலைத்திருப்பார்!

காரியம் யாவிலும் உடன்நின்று,
கற்புடன் நம்மைக் காத்திடுவார்!
நண்பர் அவரே நல்லவராம்!
நலம்பட தொடருமாம் நட்பதுவும்!

வேரிடும் உறவினில் சிலகாலம்
விருப்புடன் நம்மிடம் பழகிவிட்டு,
வேலை முடிந்ததும் பறந்திடுவார்!
வேறிடம் சென்றதாய்க் கூறிடுவர்!

வேதனை உச்சம் இவர் உறவு,
இடுக்கண் களைதலாய் நிலையாது!
வாதனை செய்வதில் வல்லவராம்
வகையாய் தன்கதை நடத்திடுவார்!

சாதனை செய்யும் மாந்தரைப்போல்;
சரித்திரக் கதைகள் சொல்லிவிட்டு,
தூதுவன் போலே நம்மருகில்,
துணையாய் நிற்பதாய்க் கதைவிட்டு,

பாதகம் பலவுமாய் செய்துவைத்தே
பயனாய் தன்கதை முடித்திடுவார்!
தீதிலா மனத்தை உடையவராய்த்,
தெரியும் அவர்நட்பு வேண்டாவே!

- **கவிவளவன்** ஆகிய **கு.ப. அசோகன்**

05-11-2023 (மதியம் 1.00 மணி)